DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.119 /2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 26th day of June 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 05** | கிராமம் | : | இந்திராநகர் |
| பெயர் | : | முனீஸ்வரி | தாலுகா | : | கீழக்கரை |
| க/ பெ. | : | சந்திரசேகர் | சமயம் | : | இந்து |
| வயது | : | 38 | ஜாதி | : | தேவேந்திரகுல வேலாளர் |
| தொழில் | : | கூலிவேலை | | | |

<u>நாள்: 26.06.2023</u>
<u>நேரம்: 12.30 பி.ப.</u>

2, 3 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி தரப்பில் அவரது வழக்கறிஞரால் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். 2,3 வருடங்களுக்கு முன்பு காலையில் நான் வீட்டில் இருந்தபோது போலிசார் என்னிடம் ஒரு வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3** ஆகும். வழக்குப்பற்றி வேறு விவரம் எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**<u>அரசுதரப்பு கு.வி.</u>**

கடந்த 24.12.2021ம் தேதி காலை 09.30 மணியைப்போல போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், ஆனந்த் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு கு.வி –இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.06.26 16:42:25 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 119/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 26th day of June 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 06** | கிராமம் | : | இராமநாதபுரம் |
| பெயர் | : | M. கிருஷ்ணமூர்த்தி | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | நாகரத்தினம் | சமயம் | : | இந்து |
| வயது | : | 57 | ஜாதி | : | |
| தொழில் | | சிறப்பு சார்பு ஆய்வாளர் | | | |

<u>நாள்: 26.06.2023</u>
<u>நேரம்: 12.35 பி.ப.</u>

2, 3 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி தரப்பில் அவரது வழக்கறிஞரால் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது உத்திரகோசமங்கை காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். உத்திரகோசமங்கை காவல்நிலைய குற்ற எண். 110/2021 U/s. 341, 294(b), 323 IPC & 4 of TNPHW Act ன் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர், திரு. முத்துராமன் அவர்கள் தற்போது பணிமாறுதலாகி மாவட்ட குற்றப்பதிவேடு கூடத்தில் பணிபுரிந்து வருகிறார். அவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இவ்வழக்கின் கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 24.12.2021 ம் தேதி 08.30 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு. முத்துராமன் அவர்கள் நிலையப் பொறுப்பிலிருந்தபோது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலைப்பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா1 சுப்பிரமணியன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தைப்பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 110/2021 U/s. 341, 294(b), 323 IPC & 4 of

TNPHW Act ன் கீழ்  வழக்கு பதிவு செய்தார்.  வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.  **அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். வாதியின் புகார் அ.சா.ஆ.5 ஆகும்**.  பின்பு வழக்கை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முனீஸ்வரி மற்றும் ஆனந்த் ஆகியோர்கள் முன்னிலையில்  சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.  **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆகும்.**  அன்றைய தினமே சாட்சிகள் சுப்பிரமணியன், நந்தினி, லதா, முனீஸ்வரி, முனியாண்டி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அசா1 மற்றும் அ.சா.2 ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. சாந்தினி அவர்களை விசாரித்து விபத்துப்பதிவேடு பெற்றுள்ளார்.  **அ.சா.1 ன் விபத்துப்பதிவேடு அ.சா.ஆ.8 ஆகும். அ.சா.1 ன் விபத்துப்பதிவேடு அ.சா.ஆ.9 ஆகும்.** பின்பு 16.01.2022 ம் தேதி இந்திராநகர் பஸ்டாப்பில் வைத்து எதிரிகளை கைது செய்து காவல் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.  பின்பு விசாரணை அதிகாரி தனது விசாரணையை முடித்து அதே பிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு கு.வி:</u>**

சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல.  வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்ததில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சொன்ன இடத்தில் வைத்து எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

**ம.வி – இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.06.26 16:42:30 +0530